**ஜனவரி - 15**

**"நியாயம் செய்து, இரக்கத்தை சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல், வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்." - மீகா 6:8**

இவைகளை நியாயமான தேவைகள் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். எதிர் காலத்தில் உலகத்தை நியாயந்தீர்ப்பதற்காக யாரைத் தேவன் இப்பொழுது பயிற்றுவிக்கிறாரோ, அவர்களிடமிருந்து அவர் இதற்கும் குறைவானதை உரிமையுடன் கேட்க முடியாது என்பது தெளிவாகிறது; ஆயினும் தீர்க்கதரிசியின் மூலமாகத் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிற இந்த மூன்று குணங்களும் அன்பு என்கிற ஒரு வார்த்தையினுள் அடங்கியிருக்கின்றன. நம்முடைய அண்டையில் வசிப்பவர்களோடும், சகோதரரோடும், நம்முடைய குடும்பங்களோடும் நம்மோடும் நியாயமாக நடந்து கொள்ளவேண்டுமென்றும், மற்றவர்களுடைய உரிமைகளை (அவர்களுடைய சரீர சம்பந்தமான உரிமைகளையும், அவர்களுடைய நீதிநெறி சம்பந்தமான உரிமைகளையும்) அவர்களுடைய அறிவு சம்பந்தமான உரிமைகளையும், அவர்களுடைய சுதந்திரங்களையும் நாம் உயர்வாக மதிக்கும் குணத்தை நம்மில் வளர்க்க நாட வேண்டும் என்றும், இவைகளை உயர்வாக மதித்த பிறகு, வார்த்தையின் எந்த அர்த்தத்தின்படியும், அந்த உரிமைகளைக் குறைக்கவோ, நிராகரிக்கவோ கூடாது என்றும் அன்பு உத்தரவிடுகிறது. **- Z '02, 172 (R 3020).**

தேவன் சார்பாகவும், மனுஷர் சார்பாகவும் அன்பின் பிரமாணத்தை நாம் நிறைவேற்ற வேண்டியதே கிறிஸ்துவினுடைய கடமையின் சாராம்சமாகும். ஒவ்வொரு மனுஷனுக்கும் அவனுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுப்பதும், கருணையின் அன்பை பலவீனருக்கும் பரிதாபகரமான நிலையிலுள்ளவர்களுக்கும், துன்பப்படுகிறவர்களுக்கும் காண்பிப்பதும் தேவனுடைய பூரண நிலைக்கு வித்தியாசமாகவுள்ள நம்முடைய பலவீனங்களையும் திறமைக் குறைகளையும் அறிந்திருக்கிற அறிவை ஆதாரமாகக்கொண்டு தெய்வீகக் குணத்தை ஆழ்ந்து உயர்வாக மதித்தாலும், தேவன் சார்பாகவும் மனிதர் அன்பாகவும் சரியாக நடந்துகொள்ளத் தகுந்ததாக்கும். **-P '35, 183**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**மத் 22:36-40; உபா 10:12; சங் 41:1; மாற் 11:25,26; எபே 4:32; கொலோ 2:13; உபா 5:33; மத் 11:29; யோவா 13:4-17; பிலி 2:5-8; 1பேது 5:5,6; 1யோவா 1:7.**

**கோபுர வாசிப்பு : Z '14, 59 (R 5407).**

**வினாக்கள் : இந்த வசனத்தில் நீதி, இரக்கம், தாழ்மை ஆகியவற்றின் சம்பந்தமாக நான் செய்தது என்ன? அதில் கிரியை செய்யத் தூண்டியது எது? அதன் விளைவு என்ன?**